www.Padasalai.Net www.TrbTnpsc.com

K

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No.: | | | | | | |

நேரம்: 1.30 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 15 x 1 = 15

1. நிலை அறிக்கை ஒரு
   a) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை b) சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   c) கடன் நடவடிக்கைகளின் அறிக்கை d) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு
2. இரட்டைப் பதிவு முறையை பொதுவாக பின்பற்றாத அமைப்பு எது?
   a) நிறுமம் b) தனியாள் வணிகம் c) பன்னாட்டு நிறுமம் d) கூட்டுப்பங்கு நிறுமம்
3. உரிமையாளரின் சொத்துக்கள் ரூ.85,000 மற்றும் பொறுப்புகள் ரூ.42,000 எனில் அவருடைய முதல் தொகை
   a) ரூ.85,000 b) ரூ.42,000 c) ரூ.1,27,000 d) ரூ.43,000
4. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள்
   a) நட்டம் b) ரொக்கம் c) முதல் d) இலாபம்
5. கடன் விற்பனையை கணக்கிட தயாரிக்கப்படுவது
   a) மொத்த கடனாளிகள் கணக்கு b) மொத்த கடனீந்தோர் கணக்கு
   c) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு d) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
6. முழுமை பெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?
   a) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை
   b) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்
   c) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை
   d) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.
7. வருவாய் மற்றும் செலவினக்கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   a) இலாபம் அல்லது நட்டம் b) நிதிநிலை
   c) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு d) உபரி அல்லது பற்றாக்குறை
8. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
   a) பெயரளவு கணக்கு b) சொத்து கணக்கு
   c) ஆள்சார் கணக்கு d) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
9. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   a) இலாபம் அல்லது நட்டம் b) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
   c) உபரி அல்லது பற்றாக்குறை d) நிதி நிலை
10. உயில் கொடை ஒரு
    a) வருவாயினச் செலவு b) முதலின வரவு
    c) வருவாயின வரவு d) முதலினச் செலவு
11. பின்வருவனவற்றுள் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?
    a) பழைய செய்தித்தாள் விற்றது b) சொத்து விற்பனை மீதான நட்டம்
    c) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் d) அறைகலன் விற்ற தொகை
12. பரிசு நிதி முதலீடுகள் தோன்றுவது ________ பக்கத்தில்.
    a) செலவுகள் b) வருமானம் c) பொறுப்புகள் d) சொத்துக்கள்
13. நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இன்னமும் பெறாதது
    a) ஒரு சொத்து b) ஒரு பொறுப்பு
    c) ஒரு செலவு d) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
14. கடனாளிகள் தொடக்க இருப்பு ரூ.1,30,000, பெற்ற ரொக்கம் ரூ.2,00,000, கடன் விற்பனை ரூ.90,000. கடனாளிகள் இறுதி இருப்பு?
    a) ரூ.30,000 b) ரூ.1,30,000 c) ரூ.40,000 d) ரூ.20,000
15. சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் ரூ.1,70,000, அவ்வாண்டின் நட்டம் ரூ.40,000 எனில் தொடக்க முதலை கணக்கிடுக.
    a) ரூ.1,30,000 b) ரூ.2,10,000 c) ரூ.40,000 d) ரூ.1,70,000

Scanned by CamScanner

## பகுதி - ஆ

**II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண் 21 கட்டாய வினா)* 4 x 2 = 8

16. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும்.

| | | |
|---|---|---|
| 1.4.2017 அன்று முதல் | ரூ. | 3,50,000 |
| 31.3.2018 அன்று முதல் | ரூ. | 3,75,000 |
| அவ்வாண்டில் கூடுதல் முதல் | ரூ. | 30,000 |
| அவ்வாண்டின் இலாபம் | ரூ. | 15,000 |
| எடுப்புகள் | | ??? |

17. இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொடக்க முதல் | ரூ. | 2,20,000 | இறுதி முதல் | ரூ. | 1,80,000 |
| கூடுதல் முதல் | ரூ. | 40,000 | எடுப்புகள் | ரூ. | 45,000 |

18. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலைக் கணக்கிடவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொடக்க கடனீந்தோர் | ரூ. | 1,70,000 | இறுதிக் கடனீந்தோர் | ரூ. | 1,90,000 |
| கொள்முதல் திருப்பம் | ரூ. | 20,000 | கடனீந்தோருக்கு செலுத்தியது | ரூ. | 4,20,000 |

19. மதி இளைஞர்கள் சங்கத்தின் 2017-2018 ம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விபரம் | ரூ. |
|---|---|
| 1.4.2017 அன்று பரிசு நிதி | 75,000 |
| 1.4.2017 அன்று பரிசு நிதிக்கான முதலீடு | 75,000 |
| பரிசுகள் வழங்கியது | 18,000 |
| பரிசு நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 16,000 |
| பரிசு நிதிக்காக நன்கொடை பெற்றது | 12,000 |

20. முதலின வரவுக்கு ஏதேனும் 2 உதாரணம் தருக.

21. நியூட்டன் அறிவியல் சங்கம் எனும் அமைப்பு ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பா? மேலும் இவ்வமைப்பின் கணக்காண்டு இறுதியில் தயாரிக்கப்படும் இறுதி கணக்குகள் யாவை?

## பகுதி - இ

**III. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண் 27 கட்டாய வினா)* 4 x 3 = 12

22. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையைக் காண்க.

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| 1.1.2018 கடனாளிகள் | 1,30,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,50,000 |
| 31.12.2018 கடனாளிகள் | 2,00,000 | ரொக்க விற்பனை | 5,00,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 | தள்ளுபடி அளித்தது | 25,000 |
| வாராக்கடன் | 25,000 | | |

23. 2018 ஏப்ரல் 1 அன்று தயாளன் ரூ.1,20,000 முதலுடன் தொழிலை தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019 மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளில் பெறப்பட்ட விவரங்கள்

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| சரக்கிருப்பு | 1,60,000 | வங்கி மேல்வரைப்பற்று | 50,000 |
| கடனீந்தோர் | 90,000 | கடனாளிகள் | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 |
| கை ரொக்கம் | 60,000 | கணினி | 30,000 |
| அறைகலன் | 30,000 | இயந்திரம் | 3,00,000 |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த செலவிற்காக ரூ.50,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

24. இரட்டைப் பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் உள்ள எவையேனும் மூன்று வேறுபாடுகளை எழுதுக.

25. கீழே கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து சச்சின் விளையாட்டு மன்றத்தின் 2018 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயாரிக்க.

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| கை ரொக்கம் 1.4.17 | 4,000 | அச்சுக் கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

Scanned by CamScanner

26. நேரு சமூக மன்றத்தின் 31.3.2018 ம் நாளைய முதல் நிதியைக் கணக்கிடு.

| விவரங்கள் (31.3.2018) | ரூ. |
|---|---|
| அறைகலன் | 1,00,000 |
| கட்டடம் | 80,000 |
| 2017-2018 சந்தா பெற வேண்டியது | 20,000 |
| 2018-2019 சந்தா முன்கூட்டிப் பெற்றது | 10,000 |
| கடன் வாங்கியது | 20,000 |
| முதலீடுகள் | 40,000 |
| கை ரொக்கம் | 8,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 |

27. சரியான முறையில் பொருத்துக:

i) முதலின செலவு - பரிசு நிதி

ii) வருவாயின செலவு - சந்தா பெற்றது

iii) முதலின வரவு - விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது

iv) வருவாயின வரவு - விளையாட்டுப் பொருட்கள் வாங்கியது

v) உபரி - வருமானத்தை விட மிகுதியான செலவுகள்

vi) பற்றாக்குறை - செலவுகளை விட மிகுதியான வருமானங்கள்

பகுதி - ஈ

3 x 5 = 15

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

28. ரவி முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.1.2018 ரூ. | 31.12.2018 ரூ. |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| அறைகலன் | 80,000 | 80,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| வங்கி ரொக்கம் | 10,000 | 15,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| கடனீந்தோர் | 1,40,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 50,000 | 50,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 82,000 | 62,000 |
| இயந்திரம் | 1,75,000 | 1,75,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.60,000 மற்றும் அவர் தன் சொந்த பயனுக்காக மாதந்தோறும் ரூ.3,000 எடுத்துக் கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

***(அல்லது)***

ராகுல் என்பவரின் 2018 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 1.4.2017 ரூ. | 31.3.2018 ரூ. |
|---|---|---|
| சரக்கிருப்பு | 2,20,000 | 1,60,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 | 10,000 |
| கடனாளிகள் | 5,30,000 | 6,40,000 |
| கடனீந்தோர் | 3,70,000 | 4,20,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |

பிற தகவல்கள்:

| விவரங்கள் | ரூ. | விவரங்கள் | ரூ. |
|---|---|---|---|
| வாடகை செலுத்தியது | 1,20,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 12,50,000 |
| பெற்ற தள்ளுபடி | 35,000 | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 11,00,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 | ரொக்க விற்பனை | 20,000 |
| எடுப்புகள் | 1,00,000 | தொடக்க முதல் (1.4.2017) | 5,20,000 |

Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



29. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கடனாளிகள் கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்து மொத்த விற்பனை மற்றும் மொத்தக் கொள்முதல் கணக்கிடவும்.

| விவரங்கள் (1.4.2018) | ரூ. | விவரங்கள் (31.3.2019) | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,40,000 | பற்பல கடனாளிகள் | 2,20,,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,50,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,20,000 | பற்பல கடனீந்தோர் | 8,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |

பிற தகவல்கள்:

| | | | |
|---|---|---|---|
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு செலுத்தியது | 30,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 6,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ரொக்கம் பெற்றது | 60,000 | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 3,20,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 4,000 | வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி | 25,000 |
| | | தள்ளுபடி பெற்றது | 10,000 |
| | | வாராக்கடன் | 16,000 |

*(அல்லது)*

பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும் வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் இடையேயான வேறுபாடுகள் ஐந்து விவரி.

30. தமிழ் இலக்கிய மன்றத்தின் 2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு பின்வருமாறு:

2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

| பெறுதல்கள் | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | வாடகையும் வீதமும் | 21,000 |
| கை ரொக்கம் | 3,200 | விரிவுரை கட்டணம் | 4,500 |
| நுழைவுக் கட்டணம் | 2,300 | பல்வகைச் செலவுகள் | 7,200 |
| சந்தா | 46,000 | நிலை வைப்பு | 40,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 2,500 | இருப்பு கீ/இ | |
| நிலை வைப்பின் மீதான வட்டி | 500 | கை ரொக்கம் | 4,300 |
| அறைகலன் விற்றது (on 1.4.2018) (ஏட்டு மதிப்பு ரூ.25,000) | 22,500 | | |
| | 77,000 | | 77,000 |

<u>கூடுதல் தகவல்கள்</u>: (a) ஆண்டு தொடக்கத்தில் மன்றத்தில் உள்ள நூல்கள் மதிப்பு ரூ.20,000 மற்றும் அறைகலன் மதிப்பு ரூ.40,000 (b) நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா ரூ.1,000. 2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும். *(அல்லது)*

சென்னை மனமகிழ் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்க.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 25,000 | காவலாளிக்கு சம்பளம் கொடுத்தது | 12,000 |
| தொடக்க வங்கி இருப்பு | 35,000 | மன்ற ஆண்டு விழா செலவுகள் | 15,000 |
| நன்கொடைகள் பெற்றது | 48,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| பழைய உபகரணங்கள் பெற்றது | 26,000 | பொழுதுபோக்குச் செலவுகள் | 13,500 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 13,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5,000 |
| மன்ற ஆண்டு விழா வசூல் | 18,000 | அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள் | 3,000 |
| டென்னிஸ் மைதான கட்டுமானம் | 7,000 | முதலீடுகள் விற்றது | 12,000 |
| அறக்கொடை நாடகக் கட்சி வசூல் | 4,000 | இறுதி ரொக்க இருப்பு | 12,000 |
| வாடகை செலுத்தியது | 1,000 | | |

******

Scanned by CamScanner